[1989 ஏப்ரல் 4

கோவை மாநகர ரேஷன் கடைகளில்
உணவுப் பொருள் வழங்கல்.

25—(*வினா எண் 182) திரு.மு. இராமநாதன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் உள்ள ரேஷன் கடைகளில் இதுவரை வழங்கி வந்த ரேஷன் பங்கீட்டில் 20 சதவிகிதம் குறைத்து வழங்கிட உணவு வழங்கு துறை உத்தரவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கே இடம் இல்லை என்று பதில் அளித்து விட்டார்கள். ஆனால் அமைச்சர் மீது நான் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். நேராக நானே சென்று சில ரேஷன் கடைகளில் விசாரித்தபோது, சிவில், சப்ளைஸ் நிர்வாகத்திலேயிருந்து எங்களுக்கு அப்படி ஒரு உத்தரவு வந்திருக்கிறது என்று கடைக்காரர்கள் சொல்லி, அதன் காரணமாக 20 சதவிகிதம் குறைத்துக் கொடுப்பதாகச் சொல்லி கடைசி வாரத்தினுடைய கடைசியிலே வந்து ரேஷன் வாங்கக் கூடியவர்களைத் திருப்பி அனுப்பி விட்டீர்களே, 20 சதவிகிதம் குறைத்து என்று சொன்னாலும் கூட அந்தக் கடையில் பதிவு செய்திருக்கின்ற எல்லா கார்டு ஹோல்டர்களுக்கும்தானே அந்த 20பர் சென்ட் குறைத்துக் கொடுக்க வேண்டும்; என்றும் ஒரு குறிப்பிட்ட கடையிலே வரக்கூடியவர்களுக்கு மட்டும் இல்லை என்று சொல்கிறீர்களே, அப்படியும் உத்தரவு வந்திருக்கிறதா என்று கேட்டபோது, அப்படி வரவில்லை என்று பதில் சொன்னார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் இதுபற்றி ஆராய்ந்து அந்த மாதிரியான தகவல் வந்திருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து மட்டுமல்ல, எந்தத் துறையிலிருந்தும் அப்படிப்பட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், கோவை மாவட்டத்திலே இந்த மாத இறுதியில் அரிசியினுடைய இருப்பு 10,916 டன் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல ஏதாவது ஒரு ரேஷன் கடையில் அப்படி நடந்து கொண்டு இருப்பார்களேயானால் அவர்கள் மீது நிச்சயமாக இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

1989 ஏப்ரல் 4]

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே, ரேஷன் கார்டிலே இரண்டுபேர் இருக்கிற குடும்பத்தில் கணவன் இறந்து மனைவியோ அல்லது யாரரோ ஒருவர் இறந்துவிட்டு ஒரு நபர் கார்டு என்று வந்து விட்டால், அவர்களுக்கு ரேஷனே கொடுக்க வேண்டியதில்லை என்று உத்தரவு வந்திருப்பதாகவும், ஒன் மேன் கார்டுக்கு எல்லாம் ரெஃப்யூஸ் செய்து அரிசியே கொடுக்கமுடியாது என்று திருப்பி அனுப்பப்படுகிறது நிலை இருக்கின்றது. எனவே, அப்படி ஏதே னும் அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறதா? இல்லையென்றால் அதுபோல் அந்த உத்தரவைக் காரணம் காட்டி அரிசி வழங்காமல் அரசிற்குக் கெட்ட பெயர் உருவாக்கக்கூடியவர்கள் மீது நட வடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்திரவு ஏதும் அரசாங்கம் பிறப்பிக்கவில்லை. ஒரு குடும்பத்திலே ஒரு நபர் மட்டும் இருந்தால் கூட அவர்களுக்கு நான்கு கிலோ அரிசி கொடுக்கவேண்டும் என்ற உத்தரவுதான் அமலிலே இருக்கிறது. பொதுவாக ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் அதிகபட்சம் 12 கிலோவும், குறைந்த பட்சம் ஒரு நபராக இருந்தால் 4 கிலோவும், இரண்டு நபராக இருந்தால் 8 கிலோவும் என்று தான் அரிசி இப்போது வழங்கப்பட்டு வரு கிறது. இந்தப் புகார் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களை அளிப்பார்களேயானால், நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில், திருச்சியில் கூட 6 கிலோ அரிசி பல கடைகளில் தரப்பட்டதாகவும், கேட்ட போது அரிசி மத்திய சர்க்கார் குறைத்து விட்டதாக அதற்குக் காரணம் சொன்னதாகவும் எனக்குத் தகவல் வந்திருக் கிறது. அதேபோல், சென்னையிலும், பல பகுதிகளிலிருந்து 6 கிலோ அரிசி, அதாவது மாதக்கடைசியில். வாங்கக் கூடியவர் களுக்கு அப்படித் தரப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விசாரணை செய்வதற்கு நிச்சயமாக மறுபடியும் தகவல் தெரிந்து தருவதற்கு என்னால் முடியும் என்பதைக் கூறி, அமைச்சர் அதைப்பற்றி என்ன கருத்துக் கூறுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் களே, 15 நாட்களுக்கு ஒரு முறை 6 கிலோ அரிசி சிலர் வாங்கிக் கொள்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 12 கிலோ அரிசி கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நிலை. ஆனால் இந்த அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்கவேண்டும் என்று சில

[1989 ஏப்ரல் 4

(முற்பகல் 9-20)

ஊழியர்கள் நடந்து கொள்வதாக புகார்கள் வந்து, ஏறக்குறைய இதுவரையில் 200க்கும் மேற்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப் பட்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல எந்த இடத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டு அரசுக்கு எழுத்து மூலமாக கொடுப்பார்களானால், நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. ஆசையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியில் ஏற்கனவே அரசு அறிவித்து இருந்த 12 கிலோ அரிசி வழங்குகின்ற முறை கடைப்பிடிக்கப்படாமல் இருக்கிறது. பலவிடங்களில் கார்டு களுக்கு 6 கிலோ அரிசி வழங்குகிறார்கள். இன்னும் பலவிடங் களில் கார்டுகளுக்கு முழுமையாக அரிசி வழங்கப்படுவது இல்லை. அப்படி வழங்குகின்ற அரிசியும் கூட பாசி பிடித்ததைப் போல உணவுக்கு சமைக்கப்பயன்படுத்த முடியாதஅரிசியாக இருக்கிறது. ரேஷன் கடையில் உள்ள விற்பனையாளர்களிடம் அதைத் திருப் பிக்கொடுத்தால் திரும்பப் பெற மறுக்கிறார்கள், எனவே புதிய அரிசியோடு கலந்து விற்கும் உரிமைப் பெற்றவர்களாக இருக்கிறோம் என்று எல்லாம் சொல்லி ஏமாற்று கிறார்கள். எனவே இந்த முறையைத் தவிர்த்து முறையான முறையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு ந. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கள் எல்லாம் கேட்ட கேள்விகளின் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ரேஷன் கடைகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் இனிமேலாவது முறையாக நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். இல்லை என்றால், யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் இந்த அரசு புகார்கள் வருகின்ற இடத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கும். பாசி பிடித்த அரிசியைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி ஒரு குறிப்பிட்ட ரகம் பஞ்சாபிலிருந்து மத்திய அரசின் தொகுப்பிலிருந்து நமக்கு கொடுத்த அந்த அரிசியின் மீது புகார்கள் வந்ததன் அடிப்படை யில் அதனை திரும்பப் பெறும்படி சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக நமக்கு அரிசி மாதம் 40 ஆயிரம் டன் மத்திய தொகுப்பிலிருந்து வருகின்ற காரணத்தால் அவர்கள் எந்த அரிசியை அனுப்புகிறார்களோ, அதைத்தான் நாம் விநியோகிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் ஆயிரம் டன்னுக்கு அதிகமாக மத்தியத் தொகுப்பிலிருந்து பெறப்பட்ட— இப்படி மக்களுக்கு உபயோகம் இல்லாத அரிசியை விநியோகிக்கக்கூடாது என்று அரசு உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

1989 ஏப்ரல் 4]

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கின்ற 12 கிலோ அரிசி ஒரே சமயத்தில் கொடுக்கப்படவேண்டும். அப்படி வாங்க முடியாதவர்களுக்கு இரண்டாவது தரம் வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் உறுதி சொல்லியிருக்கிறார்கள். அந்த நியாய விலைக் கடையில் கொடுக்கக்கூடிய அத்தனைப் பொருட்களும் ஒரேசமயத்தில் ரேஷன் கார்டுகளுக்கு கொடுக்கப்படும் என்ற முறை அமலுக்கு வந்தால் இந்த தொல்லை இருக்காது. மேலும் இதற்கு கண்காணிப்பு என்பது மிக முக்கியம். ஏனென்றால் பழைய பெருச்சாளிகள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் பெரிய தொல்லைகளை நமக்கு உண்டாக்கிக் கொண்டு இருப்பார்கள். அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா? ஒருவர் மட்டும் இருக்கிற கார்டு பற்றி எனக்கு ரிப்போர்ட்டே வந்திருக்கிறது. அதை வேண்டுமானால் நான் அனுப்பி வைக்கிறேன். 4, 5 உறுப்பினர்களைக்கொண்ட கார்டை வாங்கிக்கொண்டு இருந்த ஒரு குடும்பத்தில் 2 பேர் ஊருக்குப் போனதால் அவர், அதை கழித்து நியாயமாக ஒரே ஒருவருடைய பெயரைப் போட்டுக்கொண்டு போனதற்கு ஒருவருக்கு என்றால் ரேஷன் கொடுப்பது இல்லை என்று உத்தரவு வந்திருக்கிறது என்று, கோவை 11- சர்க்கிள் ரேஷனிங் ஆபீசர் அவரை திருப்பி அனுப்பி விட்டாராம். அவர் எனக்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து ரேஷன் கார்டுகளுக்கு எல்லா பொருட்களும் அவர்கள் கேட்கின்ற நாட்களில் கொடுக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது சரியாக அமல்படுத்தப்படுகிறதா என்று சோதனையிட்டபோது சென்னையில் மட்டும் ஏறக்குறைய 1040 ரேஷன் கடைகளில் ஒரே நாளில் சோதனையிட்டபோது, 6 கடைகளைத் தவிர மீதி எல்லாக் கடைகளிலும் அப்படி வினியோகிக்கப்படுவதாக தகவல் வந்திருக்கிறது. தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இந்தத் துறையில் அதிக ஆர்வம் காட்டுகின்ற காரணத்தால் வாரத்திற்கு ஒரு முறை சோதனையிடுகின்ற அந்தத் திட்டத்தையும் அரசு பரிசீலிக்கும். அதைப் போலவே கோவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு நபருக்கு கொடுக்க முடியாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். இன்றே அந்த குறிப்பிட்ட நபர் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே ஒரே மயக்கமா?

[1989 ஏப்ரல் 4

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : என்னுடைய கட்சி உறுப்பினரோடு பேசிக்கொண்டு இருந்தேன். மன்னிக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் பல்வேறு கடைகளில் 5, 6 கிலோ அரிசிக்கு மேல் வழங்கப்படுவது இல்லை. அது மட்டும் அல்ல, சிலவிடங்களில் குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியில் 2 கிலோ அல்லது 3 கிலோ அரிசி தான் இன்னமும் கொடுக்கிறார்கள். அந்தக் கடையின் பெயரை வேண்டுமானால் நான் கொடுக்கிறேன். 10 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டர் தூரம் நடந்துசென்று 2 கிலோ, 3 கிலோதான் வாங்கி வருகிறார்கள். அப்படிப்பட்ட கடைகளின் மீது உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கார்டுகள் பல காலத்திற்கு முன்னாலே விநியோகிக்கப்பட்டவை. ரேஷன் கார்டுகளில் பல கார்டுகள் அடமானத்திலே இருக்கின்றன. அதிலே குறைந்தது 30 சதவீதம் போலி கார்டுகள். எனவே அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, சரி செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் எப்பொழுதும் வழங்கப்படுவதில்லை. ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகின்ற ரேஷன் கார்டுகள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, சில இடங்களிலே அடகு பிடிக்கிறார்கள். அதன் மீது கடன் கூட வாங்குகிறார்கள். இந்தப் புகார்களெல்லாம் அரசாங்கத்திற்கு வந்ததற்குப் பிறகு இந்த இரண்டு மாத காலத்தில், இதுவரையில் ஏறக்குறைய 1 லட்சத்து 40 ஆயிரம் போகஸ் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் குறைந்தது 5 இலட்சம் கார்டுகளாவது இப்படி இருக்கக் கூடும் என்று அதிகாரிகளாலே நம்பப்படுகிறது. அந்தக் கார்டுகளைக் கண்டுபிடிக்கின்ற வேலைகளில் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS